## மாகாணக்கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்

### கல்விப்பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) நிலையறி பரீட்சை – 2021

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ்மொழியும் இலக்கியமும்<br>தரம் 11 | 22 | T | III | இரண்டு மணித்தியாலம் |

கவனிக்க: அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடைஎழுதுக.
இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

**01)** **பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக**

i.“நீர் நணிப் படிகோடேறிச் சீர்மிக்க…………”

(அ) இங்கு கோடு என்பது எதனைக் குறிக்கின்றது?

(ஆ) ‘நீர் நணி’ என்பதால் கருதிக்கொள்வது யாது?

I. “உச்சிவெயிலில் ஏலெலோ உருகிறேன் ஐலசா
உள்ளம் மட்டும் ஏலெலோ உன்னிடமே….”

(அ) இப்பாடல் எவ்வேளையில்பாடப்படும்?

(ஆ) ‘உன்னிடம்’ என்பது எதனைக் குறித்து நிற்கின்றது?

II. “தாழை சோறிட வாழை குருத்திடும்
சந்திரசூடர் தென்னாரிய நாடே……”

(அ) தாழை என்பது குறிக்கும் பொருள்

(ஆ) சந்திரசூடர் என்பதன் கருத்து யாது?

III. “சிலிர்த்துடலின் நீரகற்றும் சிறுபறவைச் செயலும்
சிரித்து விளையாடி மகிழும் சிறுமழலைத் தமிழும்”

(அ) சிறுபறவையின் செயல் யாது?

(ஆ) இங்கு குதூகலத்தை வெளிப்படுத்தி நிற்கும் தொடர் யாது?

IV. “எனது சிரசில் சௌந்தர்ய கிரீடம் சூட்டியதான மிதப்பு. விலாவிரண்டிலும் சிறகு முளைத்து”

(அ) சௌந்தர்யம் என்பதன் கருத்து யாது?

(ஆ) ‘எனது’ எனக்குறிப்பிடப்பட்டவர் யார்?

V. “கொடுமையாலளந்தாளையாரிவரென் றுரையெனக் குரிசில் கூறும்”

(அ) யாரால்,யாருக்கு கூறப்பட்டது?

(ஆ) குரிசில் எனக் கூறப்பட்டவர் யார்?

vi.“உயிர் வாழ்வதற்காக இலட்சியத்தைக் கைவிடுதல் ஈமஞ்சேர் மாலைபோல இழிதிட்ட செயலாகும்”
(அ) ஈமஞ்சேர் என்றால் என்ன?
(ஆ) இங்கு இடம்பெற்ற அணி யாது?

VI. “ஒரு பகுதியில் நானும் இன்னொரு பகுதியில் மனைவியும் மீதியில் அரவிந்தனுமாகப் பயிர் செய்தோம்”
(அ) இங்கு ஒரு பகுதி என்பது எதன் பகுதி ?
(ஆ) இங்கு குறிப்பிடப்பட்ட பயிர் எது?

VII “ஆர் தட்டினும் தட்டுவாராமலே அன்னதானத்துக்கு மார்தட்டியதுரைமால் சீதக்காதிவரோதயனே”

(அ) ‘ஆர்’எனக்குறிப்பிடப்படுவோர் யார்?
(ஆ) தட்டு என்பது குறிக்கும் இரு பொருள்களும் எவை?

VII. “இங்கே அந்தக் கார் அவர்களது மணவாழ்வின் குறியீடாக அமைகின்றது”
(அ) இங்கு அவர்கள் எனக் குறிப்பிடப்பட்டோர் யார்?
(ஆ) இச்சம்பவத்தை வெளிப்படுத்தி நிற்கும் திரைப்படம் எது?

**( 20புள்ளிகள்)**

**02.பின்வரும் செய்யுள் பகுதியையும் உரை நடைப்பகுதியையும் வாசித்து அதன் கீழ் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடைதருக**

**I**). கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
மிக்காரைச் சேர்தல் மிகமாணமுன் இனிதே
எட்டுணையானும் இரவாதுதான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிது

(அ) அறிவுடையவர் பற்றிக் கூறப்பட்ட கருத்து யாது?
(ஆ) ஈகையின் சிறப்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

**II**) ஓதிப் படிச்சி ஊர் புகழவாழ்ந்தாலும்
ஏழைக்குச் செய்ததீங்கை–அல்லா எள்ளளவும் ஏற்கமாட்டான்
காவற் பரணில் கண்ணுறங்கும் வேளையிலே
கண்ணானமச்சிவந்தென் காலூன்றக் கண்டேன்
காசிதரட்டோமச்சி–கதைத்திருக்க நான் வரட்டோ
தூதுவரக் காட்டிடட்டோ - இப்போசொல் கிளியே உன் சம்மதத்தை

(அ) இறை பெருமை எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?
(ஆ) காதலி மீது கொண்ட காதல் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?

III) நைவீர லீர்மைந்தீ ரினித் துயரா
னாடிறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவு நலமாயிற்
றாமன்றே விலங்கலற் றிண் டோட்
கைவீரக் களிறனையக் காளையிவன்
றன்னோடு கலந்து நீங்க
ளைவீரு மொருவீரா யகலிடத்தை
நெடுங்கால மளித்தி ரென்றாள்.

(அ) கோசலை கூறியஆறுதல் வார்த்தைகள் எவை?
(ஆ) குகனின் சிறப்புக்களாகக் கூறப்பட்டவை யாவை?

**IV)**முதல் வேலையாக சாமிக்கு தீபம் காட்டிவிட்டு வந்து கணிப்பொறியின் நெற்றியில் ஒரு குங்குமப் பொட்டுவைத்தாள் என் மனைவி மேகலா. கையகலத்திற்கு அரவிந்தன் அதில் 'ஓம் ஸ்ரீராம்' எழுதினான். இப்படி ஒவ்வொருவரும் ஒரு பரபரப்புடன் கம்பியூட்டரை இயக்கிப் பார்த்தோம்: தட்டிப் பார்த்தோம். அதன் புது மணத்தை நுகர்ந்தோம். அது கிர்ர்க்,கிர்ர்க் என்று உயிர்பெறும் அதியசத்தை வாய் திறந்து பார்த்தோம்.

(அ) நம்பிக்கை சார்ந்த விடயமாக இங்கு கூறப்பட்டிருப்பது யாது?
(ஆ) ஒவ்வொருவரும் கம்பியூட்டருடன் எவ்வாறு அணுகினார்கள்?

**V)**இப்போது சினிமாமொழி நமக்குப் பரிச்சயமல்லாத ஒன்றாக இருக்கிறது. மற்ற நாடுகளில் இம்மொழி வளர்ந்து கொண்டிருக்கிறது. அங்கிருந்து வரும் நல்ல சினிமாவை நாம் அனுபவிக்க முடியாததற்கு நம் பரிச்சயமின்மை தான் காரணம். சினிமாமொழி, மொழிபெயர்க்க முடியாத ஒன்று. அது மனித குலத்திற்கே பொதுவானது. அதுதான் சினிமாவின் சக்தியும் கூட. சினிமாவைப் பற்றி இந்த விழிப்புணர்வு ஏற்படாதவரை, நாம் சினிமாவைப் மனதளவில் மட்டுமே அணுகுவோம். அறிவுபூர்வமாகவும் அணுகவேண்டும். அந்த அனுபவம் ஆழமானதொன்றாக அமைய வேண்டும்.

(அ) சினிமாவின் சக்தி எனக் கூறப்பட்ட விடயம் யாது?
(ஆ) பரிச்சயமின்மை என்ற தொடர் இப்பந்தியில் எவ்வகையில் விவாதிக்கப்படுகின்றது?

**( 20புள்ளிகள்)**

**03.குகப்படலத்தில்**
(அ) பரதனின் பெருமையும்
(ஆ) இராமனைப் பிரிந்த துயரும்
வெளிப்படுத்தப்படும் வகையினை விளக்குக.

**அல்லது**

**நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்**
(அ) நாவலர் எழுதலும் சபையில் மாற்றம் ஏற்படுதலும்
(ஆ) பண்டிதமணியின் கதை கூறும் பாங்கும்
புலப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக **(15புள்ளிகள்)**

04) **சங்கப்பாடல்களில்**

(அ) குறுந்தொகையில் தலைவி இன்புற்றநிலையும்

(ஆ) புறநானூற்றில் இளமைக்காலத்து நினைவுகளும்

விபரிக்கப்படும் வகையினை விளக்குக

**அல்லது**

**மூத்தம்மா என்ற சிறுகதையில்**

(அ) ஆரம்பகாலத்தில் காசிமிடத்தே காணப்பட்ட பயந்த சுபாவம்

(ஆ) பிற்காலத்தில் இளவரசனாக தன்னை எண்ணிக்கொள்ளல்

ஆகியனவற்றைச் சான்றாதாரங்களுடன் விளக்குக

**( 15புள்ளிகள்)**

- **5ஆம், 6ஆம், 7ஆம் வினாக்களில் யாதேனும் ஒன்றைத் தெரிவுசெய்து விடை எழுதுக**

**05.ஆற்றோடு ஆற்றுநீர் அலைந்து**....என்ற நாட்டார் பாடலில்

(அ) அரிவிவெட்டும் சிறப்பு

(ஆ) நாட்டார் நம்பிக்கைகள்

ஆகியன சிறப்பிக்கப்படும் வகையினை விளக்குக

**( 10புள்ளிகள்)**

**06.எதுநல்லசினிமா**என்றகட்டுரையில்

(அ)காட்சிப்படிமம் பெறும் முக்கியத்துவம்

(ஆ) குறியீடுகளால் கதைசொல்லும் முறை

என்பவற்றினைவிளக்குக

**( 10புள்ளிகள்)**

**07.தேயிலைத் தோட்டத்திலே** என்ற கவிதையில்

(அ) மலையக மக்களின் அவலமும்

(ஆ) ஆசிரியரின் எதிர்பார்ப்பும்

முன்னிறுத்தப்படும் வகையினை விளக்குக

**( 10புள்ளிகள்)**